பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
14 06 2025 **SATURDAY 7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பு மிக்கதாக உறுதிப்படுத்துவதில் கல்வி முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

- தூய்மையான, பாதுகாப்பான மின் உற்பத்தியை எட்டுவதில் அணுசக்தியின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

- மத்தியப்பிரதேசத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது நான்கு மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

- இஸ்ரேல் - ஈரான் மோதல் விவகாரம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் ஏந்த மாற்றமும் இல்லை என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- Skopje சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manav Thakkar – Manush Shah இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பு மிக்கதாக உறுதிப்படுத்துவதில் கல்வி முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

ஐந்து வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் வளாகங்கள் மகாராஷ்ட்ராவில் தொடங்கப்படுவதற்கான ஒப்புதல் கடிதம் வழங்கும் நிகழ்ச்சி மும்பையில் இன்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய அமைச்சர், இந்தியாவை அறிவுசார்ந்த நட்பு நாடாக உலக நாடுகள் கருதுவதாக கூறினார்.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இங்கு செயல்படுவதன் மூலமாக, வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான பயணத்தில் மேலும் முன்னேற்றம் ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின்படி, உலகத்தரம் வாய்ந்த கல்வியை குறைந்த கட்டணத்தில் மாணவர்கள் பெறும் நிலை தற்போது உருவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வித்துறையில் மகாராஷ்ட்ரா மாநிலம் தலைமைத்துவம் மிக்கதாக உருவெடுத்திருப்பதாக திரு தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

தூய்மையான, பாதுகாப்பான மின் உற்பத்தியை எட்டுவதில் அணுசக்தியின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

ஹரியானாவில் அமைக்கப்பட்டுள்ள கோரக்பூர் - ஹரியானா அணு வித்யூத் பரியோஜனா திட்டம் குறித்து அவர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்திய அணுசக்தி கழகம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார்.

மேலும், அதன்மூலம் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப்பணிகள் மக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஒட்டுமொத்த உலக மக்களின் நல்வாழ்வுக்காக இந்தியா கொண்டுள்ள பேரார்வத்தை யோகா வெளிப்படுத்துகிறது என்று ஆயுஷ்துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உலக யோகா உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், மனித சமுதாயம் சந்தித்துவரும் பல்வேறு சவால்களுக்கு யோகா ஒரு தீர்வாகவும், வரப்பிரசாதமாகவும் அமைந்துள்ளது என்று கூறினார்.

உலக அமைதிக்காக இந்தியாவின் கொடையாக யோகா அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மதம், இனம், மொழி ஆகிய எல்லைகளை கடந்து, அனைவருக்கும் பொதுவான ஒன்றாக யோகா பயிற்சி திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரின் உடல்நலத்தையும், மன நலத்தையும் காப்பதில் யோகா முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் யோகாசனத்தை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், யோகா Connect என்ற உலக யோகா உச்சிமாநாடு நடத்தப்படுவதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், யோகாசன குரு ராம்தேவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.

ராஜஸ்தானை சேர்ந்த மகேஷ் குமார் 686 மதிப்பெண் பெற்று முதலிடம் பெற்றுள்ளார்.

இந்த தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் தேசிய தேர்வு முகமையின் neet.nta.nic.in ’ என்ற இணையதளத்தில வெளியிடப்பட்டுள்ளது.

பாடவாரியான மதிப்பெண்களையும், தரவரிசையையும் தேர்வர்கள் இந்த இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

ஜார்கண்டில் இன்று நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் மத்திய ரிசர்வ் காவல்படையை சேர்ந்த அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

ஒடிஷாவின் ரூர்கேலா மாவட்டத்தில் ஜார்கண்ட் - ஒடிஷா எல்லைப்பகுதியில் மத்திய ரிசர்வ் காவல்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாகவும் அதில் காயமடைந்த அந்த அதிகாரி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியிலேயே உயிரிழந்ததாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

அந்த அதிகாரியின் குடும்பத்தினருக்கு ஜார்கண்ட் ஆளுநர் திரு சந்தோஷ் கங்வார், தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

உலக ரத்த கொடையாளர்கள் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, ரத்த தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி தலைமை மருத்துவமனையில் சிறப்பு ரத்த தான முகாம் இன்று நடைபெற்றது.

ரத்த தானம் செய்வதன்மூலம், கிடைக்கும் நன்மைகள் குறித்து அனைவரும் அறியும் வகையில் இந்த முகாம் நடத்தப்பட்டதாக வேலூர் மாவட்ட ரத்த வங்கி தலைவர் திரு தீபக் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte - ' தீபக் - 43 'Sec.)*

<<<<<<>>>>>

பிரிக்ஸ் அமைப்பின் நட்பு நாடுகளில் ஒன்றாக வியட்நாம் இணைந்துள்ளது.

பிரேசில் வெளியுறவு அமைச்சகம் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக, பிரேசில் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆசியாவில் சிறப்பான பொருளாதார செயல்பாடுகளை கொண்ட நாடாக வியட்நாம் விளங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெலாரஸ், பொலிவியா, கஜகஸ்தான், கியூபா, மலேசியா, நைஜீரியா, தாய்லாந்து, உகாண்டா மற்றும் உஸ்பெகிஸ்தானையடுத்து பிரிக்ஸ் அமைப்பின் 10-ஆவது நட்பு நாடாக வியட்நாம் இணைந்துள்ளது.

<<<<<<>>>>>

மத்தியப்பிரதேசத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஒரு பெண் உட்பட நான்கு மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

Balaghat மாவட்டத்தில் பசாமா தாதர் வனப்பகுதியில் காவல்துறையினர் மற்றும் மாவோயிஸ்ட் எதிர்ப்புப்படையினர் இணைந்து இன்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், அப்போது தாக்குதல் நடத்திய மாவோயிஸ்ட்டுகளை திருப்பி தாக்கியதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

உளவுத்தகவல்கள் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் நடைபெற்று வருவதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>

இஸ்ரேல் - ஈரான் மோதல் விவகாரம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், அதுதொடர்பான விவாதத்தில் இந்தியா பங்கேற்கவில்லை என்று அந்த அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

பதற்றத்தை தணிக்கும் வகையில் பேச்சுவார்த்தை மூலமாக தீர்வுகாண்பதையே இந்தியா விரும்புவதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த விவகாரம் தொடர்பாக, ஈரான் வெளியுறவு அமைச்சருடன் மத்திய அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் விவாதித்ததாகவும், அப்போது தற்போதைய சூழல் குறித்து அவர் கவலை தெரிவித்ததாகவும் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே மோதல் நீடித்து வருவதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ஏவுகணை தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும், 12-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் நாட்டு ராணுவத்தை சேர்ந்த இரண்டு தளபதிகள் உயிரிழந்துள்ளனர்.

இதனை ஈரான் அரசு உறுதிபடுத்தியுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேலுக்கு அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகள் உதவிகளை வழங்கக்கூடாது என்று ஈரான் எச்சரித்துள்ளது.

அணுசக்தி விவகாரம் தொடர்பாக, அமெரிக்காவுடன் நாளை மேற்கொள்ளப்பட இருந்த பேச்சுவார்த்தையிலிருந்து விலகுவதாகவும் அந்நாடு கூறியுள்ளது.

இஸ்ரேல் மிகப்பெரிய அளவில் ஈரான் மீது தாக்குதல் நடத்திய நிலையில், இந்த பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அர்த்தமற்றது என்று அந்த நாடு குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே, ஈரான் நாட்டில் அனைத்து விமானங்களின் இயக்கமும் மறு அறிவிப்பு வரும்வரை நிறுத்தப்படுவதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் உள்ள Ben Gurion சர்வதேச விமான நிலையம் மூடப்படுவதாக அந்நாடு அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

Skopje சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manav Thakkar – Manush Shah இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 4-11, 11-8, 11-4, 11-4 என்ற செட் கணக்கில், ஸ்லோவேனியாவின் Varko Jorgec- Deni Kozul இணையை வென்றது.

-------------

ஆசிய ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Pranati Nayak வெண்கலப்பதக்கம் வென்றார்.

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------------

உலக டெஸ்க் கிரிக்கெட் சாம்பியன் கோப்பையை தென்னாப்பிரிக்கா வென்றுள்ளது.

இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்ற இப்போட்டியின் நான்காம் நாளான இன்று 282 ரன் என்ற இலக்கை எட்டி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா அணியை தோற்கடித்தது.

முன்னதாக, ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில 212 ரன்னும், இரண்டாவது இன்னிங்சில் 207 ரன்னும் எடுத்தது.

தென்னாப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 138 ரன் எடுத்தது.

<<<<<<END>>>>>